# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர்188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:***ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **01 செப்டம்பர் 2019** | **பொதுக்காலம் 22 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |




**தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர்; தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர். (லூக் 14:11)**

# உங்கள் சிந்தனைக்கு...

பொதுக்காலம் ஆண்டின் 22ஆம் ஞாயிறுத் திருவழிப்பாட்டியில் பங்கேற்க ஓர் இனமாய் ஆலயம் வந்துள்ள இறைமக்களாகிய உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறோம்.

சென்ற வாரம் குறுகலான பாதையின் வழியாக நிறைவாழ்வுக்கு அழைத்த இயேசு, இன்று பணிவு, தாழ்ச்சி, தன்னடக்கம் ஆகிய மகத்தானச் செயல்கள் கடவுள் முன்பாக உயர்த்தப்படும் மாபெரும் கொடையை நமக்குத் தருகின்றன என்கிறார். இன்றைய முதல் வாசகத்திலும் சீராக்கின் ஞானநூலின் ஆசிரியர் “குழந்தாய், நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய்: அவ்வாறாயின், கடவுளுக்கு உகந்தோர் உனக்கு அன்புக் காட்டுவர்.“ என்று கூறுகிறார். மனிதர் முன் உயர்ந்தவர் எப்பொழுதுமே உயர்ந்தவர்கள் போல் தோன்றினாலும் கடவுள் முன்னிலையில் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுவர். எனவே பணிவோடு நடந்து கொள்வது கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் ஒரு அடையாளம்.

தாழ்ச்சியுள்ளவர்கள் மற்றவர் மீது குறிப்பாக ஏழைகள் மீது அக்கறை காட்ட முடியும். தாழ்ச்சி உள்ளவர்களுக்குக் கடவுளின் மறைபொருள் வெளிப்படுத்தப்படுகின்றது. இவர்கள் ஆண்டவரை மாட்சிப்படுத்தும் பேறுபெற்றவர்கள். நம் அன்னை மரியாள் இதற்கு ஒரு சாட்சியாக உள்ளார். இறைவனின் அடிமை நான் என்று தன்னைத் தாழ்த்தியவர் அடைந்த உன்னத நிலையை நாம் அறிவோம்.

விட்டுக் கொடுப்பவர் வீழ்ந்ததில்லை. தாழ்ச்சியுடையோர் நிறைவாழ்வில் இறைவனால் உயர்த்தப்படுகின்றனர் என்பதை மனதில் பதிவு செய்து தாழ்வுமனப்பான்மையை ஒழித்துவிட்டு நான் கனிவும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன் என்ற இயேசுவின் அமுதமொழியை வாழ்வாக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு நடைபெறும் இடைவிடா சகாய அன்னையின் நவநாள், வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருவிழா காரணமாக **வருகின்ற வாரம் நடைபெறாது** என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.



## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு




29-09-2019 ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம்: ஆலயப் பல்நோக்குச் சமூகக்கூடம்

முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

தொடர்பு: திரு. ரெக்ஸ் **(9822-6171)**



## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

**14-09-2019 சனிக்கிழமை, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, இறைவனின் அன்பை சுவைக்கவும், அவரைப் பற்றிமேலும் அறிந்து, அவரோடு உறவாடவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.




**இவ்வார நவநாளைச் சிறப்பிப்போர்** : தூய சம்மனசுகளின் இராக்கினி ஆலயம், புக்கிட் பாத்தோக்

**அடுத்தவார இறுதி நவநாளை நமது தூய லூர்து அன்னை ஆலயத்தினர் சிறப்பிப்பார்கள்**

---

**உங்கள் கவனத்திற்கு...**




- ♥ திருவிழா தினத்தன்று உங்களுடைய திருப்பலிக் கருத்துக்கள் எழுதி வாசிக்கப்படும்.



- ♥ திருவிழாவின் போது, வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருத்தலத்திலிருந்து கொண்டுவந்த ஆசீர்வதிக்கப்பட்ட எண்ணை மற்றும் மெழுகுதிரிகள், மலர்க்கொத்துக்கள் விற்பனைக்கு வைக்கப்படும்.



- ♥ திருவிழா தினத்தன்று மதியம் 1 மணி திருப்பலி முடிந்த பின், ஆலய வளாகத்தினுள் வாகனங்கள் நிறுத்த அனுமதியில்லை.

---

## ஆசீர்வாதச் சந்தை

தூய வேளாங்கண்ணி அன்னை திருவிழா அன்று மிக மலிவான விலையில் ஆண், பெண், சிறுவர் ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் மேலும் பல!

**வெறும் $1, $2, $5 மட்டுமே**

**நாள்:** 8 செப்டம்பர் 2019, ஞாயிறு

**நேரம்:** மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை

**இடம்:** தூய லூர்து அன்னை ஆலயம்




பொருட்களை வாங்கிச் செல்ல பிளாஸ்டிக் பைகள் கொடுக்கப்பட மாட்டாது. உங்கள் சொந்தப் பைகளைக் கொண்டு வாருங்கள். இதில் கிடைக்கும் வருமானம் நமது தூய லூர்து அன்னை ஆலயச் சீரமைப்பு நிதிக்கு வழங்கப்படும்.

வாருங்கள்! வாங்கிச் செல்லுங்கள்!

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | சீராக்கின் ஞான நூல் 3: 17-18,20,28-29 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 68: 3-10 |
| **பதிலுரை: ஒடுக்கப்பட்டோர்க்கு கடவுளே, மறுவாழ்வு அளித்தீர்** | |
| **இரண்டாம் வாசகம்:** | எபிரேயர் 12: 18-19, 22-24 |
| **வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள், என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.** | |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 14: 1,7-14 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

